2026 மார்ச் மாதம் 16– ஆம் தேதி திங்கட்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 57/2025

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16– ஆம் தேதி திங்கட்கிழமை

திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 (LW12)– பாஸ்கரன் |
| தகப்பனார் பெயர்: | வெள்ளைச்சாமி |
| ஊர்: | ஜெயமங்கலம் |
| வட்டம்: | பெரியகுளம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | சார்பு ஆய்வாளர், ஜெயமங்கலம் காவல்நிலையம் |
| வயது : | 59 |

16.03.2026

(2வது எதிரி ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, ஜெயமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.02.2025ம் தேதி காலை 9.00 மணிக்கு காவல்நிலைய பணியில் இருந்தப்போது, தேவாரம் வடக்கு தெருவை சேர்ந்த தங்கப்பாண்டி மகன் சிவச்சந்துரு நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, பார்வையிட்டு, தேவாரம் காவல்நிலைய குற்ற எண்.27/2025 பிரிவுகள் 152, 353(1), 296(பி) BNS r/w 4 of TNPHW Act–ன்படி வழக்குப் பதிவு செய்தேன்.

2. சம்பவ இடம் சென்று, சாட்சிகள் சஞ்சய் மற்றும் சீனு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் பதிவு

செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் சிவசந்துரு மற்றும் சிவசூர்யா ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமுலங்கள் பதிவு செய்தேன்.

3. எனது விசாரணையில் எதிரிகள் பிரிவு 109 BNS –ன்படி குற்றம் செய்ததால் பிரிவுகள் 126(2), 296(பி), 115(2), 351(3) BNS –லிருந்து 152, 353(1), 296(பி), 109 BNS r/w 4 of TNPHW Act –ன்படி சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்தேன். அந்த சட்டப்பிரிவுகள் மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்பு வழக்கு கோப்புகளை 11.03.2025ம் தேதி காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

4. புகார் மனுவை நேரடியாக வாதி காவல்நிலையத்தில் ஆஜராகி கொடுத்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 14–ல் வாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். சிவசந்துரு கொடுத்த புகாரின்பேரில் குற்ற எண்.28/2025 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் புகார் மனு பெறவில்லை என்றாலும், சொன்ன சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 16.03.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.16 17:40:51 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
16.03.2026